**<u>அசல் வழக்கு எண். 43/2019</u>**

03.04.2024

**பெயர் –கந்தசாமி த/பெ. பொன்னுசாமி (D.W.2)**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எனக்கு வாதி முருகேசனை தெரியாது. வாதி உயில்படி சொத்து அவருக்கு பாத்தியம் என பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் என்ன பதில் உரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. இந்த வழக்கின் பதில் உரை தாக்கல் செய்ததது 3,4 பிரதிவாதிகள் தான் பார்த்துக்கொண்டார்கள். 3,4 பிரதிவாதிகள் இந்த வழக்கில் என்ன எதிர்வாதம் தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் முருகேசனை சாட்சியாக விசாரித்துள்ளார்கள் என்ற விவரமும் அவர் என்ன சாட்சியம் அளித்துள்ளார் என்ற விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

2. தாவா சொத்தானது க.ச.எண்.168 ல் ஒரு ஏக்கர் 70 சென்ட் விஸ்திரனம் உள்ளது. தாவா சொத்துக்கள் வாதியின் தகப்பனார் சின்னசாமிகவுண்டருக்கு எப்படி பாத்தியப்பட்டது என்ற விவரங்கள் குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். சின்னசாமிவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்தின் பத்திரத்தை பார்த்துள்ளேனா என்றால் சின்னசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்தின் பத்திரத்தையும் முத்துசாமிக்கு எழுதி வைத்த பவர் பத்திரத்தையும் பார்த்தேன். 1ம் பிரதிவாதி முத்துசாமி எனக்கு உறவினர் இல்லை. தாவா சொத்துக்களை விற்பனை செய்வதாக 1ம் பிரதிவாதி முத்துசாமி தான் என்னிடம் சொன்னார். அப்போது தாவா சொத்துக்களை யார் விவசாயம் செய்து வந்தார்கள் யார் பராமரித்து வந்தார்கள் என்று தெரியாது என்றால் சரிதான்.

3. பொது அதிகார பத்திரத்தில் என்ன விவரம் எழுதி உள்ளது என்று கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் தற்போது ஞாபகம் இல்லை. எனது முதல் விசாரணையில் பொது அதிகார பத்திரத்திரம் பி.வா.சாஆ.7 ஆவணத்தில் என்ன சரத்துக்கள் கண்டுள்ளது என நான் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. பொது அதிகார பத்திரத்தில் எத்தனை ஏக்கர் சொத்து கண்டு எழுதப்பட்டுள்ளது என தெரிந்து கொண்டேனா என்றால் ஒரு ஏக்கர் 70 சென்ட்க்கு எழுதப்பட்டுள்ளது. பொது

அதிகார பத்திரத்தில் கிணறு கண்டு எழுதப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4. முத்துசாமியிடம் இருந்து நான் எப்போது தாவா சொத்தை கிரையம் பெற்றேன் என்றால் 2010 ம் ஆண்டு கிரையம் பெற்றேன். தாவா சொத்துக்களை ரூ.1,25,000/-க்கு கிரையம் பெற்றேன். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.10 ஆவணம் நான் முத்துசாமியிடம் இருந்து கிரையம் பெற்ற ஆவணம் என்றால் கிரையம் கொடுத்தபோது பார்த்துள்ளேன் சரிதான். **பி.வா.சா.ஆ.10 ஆவணத்தின் சொத்து விவரத்தில் கணியூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 4101/2008 தடபாத்திய உடன்படிக்கை ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள க.ச.எண் 69/1, 69/2, 69/4 மற்றும் 69/5 காலைகளில் உள்ள தடத்தில் பொதுவாக போக்குவரத்து செய்து கொள்ளும் பாத்தியம் சகிதம் என்று கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.**

5. 4101/2008 தடபாத்திய உடன்படிக்கை ஆவணம் யார் யாருக்கு இடையில் ஏற்படுத்தப்பட்டது என்றால் தெரியவில்லை. மேற்படி 4101/2008 ஆவணத்தை நான் பார்த்தேனா என்றால் இல்லை. தாவா சொத்தை பொறுத்து சின்னசாமி கவுண்டர் 1 ம் பிரதிவாதி முத்துசாமிக்கு எழுதி கொடுத்த பி.வா.சா.ஆ.7 பொது அதிகார பத்திரத்தில் மேறப்டி 4101/2008 தடபாத்திய உடன்படிக்கை குறித்து எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்கண்ட சூழ்நிலையில் 1 ம் பிரதிவாதி முத்துசாமி எந்த அடிப்படையில் எனக்கு பி.வா.சா.ஆ.10 ஆவணத்தின் மூலம் 4101/2008 தடபாத்தியம் எழுதி கொடுத்தார் என்றால் அது குறித்து எனக்கு தெரியவில்லை.

6. நான் முத்துசாமியிடம் கிரையம் பெற்ற தாவா சொத்துக்களில் கோவில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கிரைய பத்திரத்தில் கோவில் உள்ளதை குறிப்பிட்டு கிரையம் பெறவில்லை என்றால் சரிதான். 03.03.2010 ம் தேதி கிரையம் செய்த பத்திரம் 2013 ம் வருடம் தான் எனக்கு கிடைத்தது என்றால் சரிதான். ஏன் என்றால் முத்திரை தீர்வை குறைவாக செலுத்தியதால் கணக்கிட்டு செலுத்திய பிறகு ஆவணத்தை திரும்ப பெற்றேன். 03.03.2010 ம் தேதி கிரையம் பெற்ற காலத்தில் சின்னசாமிகவுண்டர் உயிருடன் இருந்தாரா என தெரிந்து கொண்டேனா என்றால் அப்போது சின்னாசமி கவுண்டர் உயிருடன் இருந்தார். எப்போது இறந்தார் என்று தெரியாது.

7.	தாவா சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்னிட்டு வில்லங்க சான்றிதழ் எடுத்து பார்த்தேனா என்றால் பார்த்தேன் வில்லங்கம் எதுவும் இல்லை. முத்துசாமி தாவா சொத்தை குறித்து கிரைய உடன்படிக்கை 3ம் நபருடன் ஏற்படுத்திய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஒரு குடிமங்கலத்தை சேர்ந்த பிரகாஷ் என்பவரிடம் கிரைய உடன்படிக்கை ஏற்படுத்திய விவரம் தெரியுமா என்றால் தெரியும் அது பி.வா.சா.ஆ.8 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. 03.03.2010 ம் தேதி பிரகாஷ் க்கு எழுதி கொடுத்த கிரைய ஒப்பந்தம் பி.வா.சா.ஆ.9 மூலம் ரத்து செய்த விவரம் எனக்கு தெரியாது. பி.வா.சா.9 ஆவணத்தில் 2வது சாட்சியாக கையெழுத்து செய்துள்ளது நான் தான் அது என்னுடைய கையெழுத்துதான். மேற்படி முத்துசாமி பிரகாஷ்க்கு பணம் கொடுத்தாரா இல்லையா என்பதை நான் பார்க்கவில்லை அது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் கிரையம் பெற்றதற்கு பின்னிட்டு முத்துசாமிக்கு பொது அதிகாரம் கொடுத்த சின்னசாமிகவுண்டரிடம் இருந்து பணம் செலுத்திவிட்டதற்கான ரசீது கேட்டு பெற்றேனா என்றால் இல்லை.

8.	சின்னசாமிகவுண்டருக்கு முத்துசாமி எவ்வளவு பணம் கொடுத்து செல்லானது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும் ரூ.1,25,000/–நான் கிரையம் பெற்ற தேதியில் முத்துசாமியிடம் கொடுத்து அதை சின்னசாமியிடம் நேரடியாக கொடுத்துவிட்டார். மேற்படி விவரத்தை இந்த வழக்கிலும், முதல் விசாரணையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 2013ல் தாவாசொத்தை கிரையம் பெற்றதற்கு பின்னிட்டு பட்டா, சிட்டா எப்போது மாற்றினேன் என்றால் சுமார் ஒரு வருட காலத்திற்குள் என் பெயருக்கு மாற்றிவிட்டேன். 20.12.2013ம் தேதி அன்றே முருகேசன் என் மீதும் 1ம் பிரதிவாதி முத்துசாமி மீதும் வழக்கு தாக்கல் செய்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

9.	20.12.2013 க்கு பின்னிட்டு சிவலிங்கம் என்பவருக்கு தாவா சொத்தை பொறுத்து ரூ.5,00,000/–க்கு ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தினேன். அது பி.வா.ஆ..11 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்தேனா என்றால் எனக்கு தெரியாது செய்திருப்பார்கள். சிவலிங்கத்துடன் ஏற்படுத்திய கிரைய ஒப்பந்தத்தின் சொத்து விவரம் பற்றி தெரியுமா என்றால் தெரியும் மேற்படி பிவாசாஆ.11 ஆவணத்தில் நான் கிரையம் பெற்ற சொத்துக்களில் காணாத விவரங்களை குறிப்பிட்டு

மேற்படி ஒப்பந்தம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். எந்த பத்திரத்தின் அடிப்படையில் கிரைய ஒப்பந்தத்தில் நீள, அகலம் குறிப்பிட்டுள்ளேன் என்றால் முத்துசாமிக்கு சின்னசாமி கொடுத்த பத்திரத்தின் அடிப்படையில் மேற்படி நீள, அகல விவரம் குறிப்பிட்டுள்ளேன். பொதுவாக கிரையம் பெறும்போது சொத்து சம்பந்தமான அனைத்து மூல ஆவணங்களையும் கிரைத்திற்கு ஆதரவாக பெற்றுக்கொண்டேன் என்று குறிப்பிட்டு எழுதுவது வழக்கம் என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற பத்திரத்தில் சின்னசாமிகவுண்டர் பத்திரத்தையோ முத்துசாமியின் பத்திரத்தையோ காணப்படவில்லை என்றால் சரிதான். **வாதிதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இனங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2024.04.03 17:08:51 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்